**அங்குணகொலபேலெஸ்ஸ பிரதேச சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 17 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 13 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 16 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அங்குணகொலபேலெஸ்ஸ பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2010 சனவரி 19 ஆந் திகதிய PED/54 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின்படி 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்களினால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கட்டிடக் கணக்கில் ஆண்டின் சேர்த்தல்களாக ரூபா 2,223,205 தொகையொன்று வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டின்படி அப்பெறுமதி ரூபா 2,423,205 ஆனமையால் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 200,000 தொகை குறைத்து மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் நிர்மாணத்திற்காக பேணப்பட்ட பதிவேடு மற்றும் கோவைகளின் படி ரூபா 2,795,212 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் கட்டிடத்தின் கீழ் ரூபா 1,282,638 தொகை மாத்திரமே மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதன்படி ஐந்தொகையில் காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 1,512,574 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதியப் பங்களிப்பாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் ரூபா 452,553 தொகையான பங்களிப்புப் பணம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட்ட ஆண்டிற்குரிய செலவினம் ரூபா 28,402 ஆகும்.

(ஈ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கிடைக்க வேண்டிய முத்திரைக்கட்டண வருமானம், சபையினால் நடாத்தப்பட்ட முத்திரைக் கட்டணப் பதிவேடு மற்றும் கோவைகளின் படி

ரூபா 749,058 ஆக இருந்த போதிலும் பேரேட்டுக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 422,880 ஆக ரூபா 326,178 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2012 ஆம் ஆண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப் பண வருமானமாக வருமானச் செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட மேலதிக வருமானத்தை பதிவழிப்பதற்காக ரூபா 1,126,647 தொகை திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டு நீதிமன்றத் தண்டப்பண கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் நாட்குறிப்புப் பதிவு இலக்கம் 19 இல் ரூபா 1,435,996 தொகையொன்று மேற்கூறப்பட்ட கணக்குகளில் வரவும் செலவும் வைக்கப்பட்டிருந்தன. அதன்படி ரூபா 309,349 தொகை அதிகரித்து அந்தக் கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஊ) கடை வாடகைப் பதிவேட்டின் படி மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கடை வாடகை வருமானம் (5.20) ரூபா 380,226 ஆக இருந்த போதிலும் ஐந்தொகையில் அது ரூபா 452,825 ஆக ரூபா 72,599 தொகை அதிகரித்து வருமானக் கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) நாட்குறிப்புப் பதிவு இலக்கம் 14 இன் படி உள்ளக கிராம அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 5,649,650 தொகையொன்று கடன்கொடுத்தோராக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஐந்தொகையில் அது ரூபா 5,469,446 தொகையாக அதாவது ரூபா 180,204 தொகை குறைத்தே காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) வேலைப் பதிவேட்டின் படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,477,022 கூட்டுத்தொகையான 5 வேலைகளுக்காக கொடுப்பனவு செய்யப்படாதிருந்ததுடன் அதற்காக கடன்கொடுத்தோர் நிதியேற்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

மாகாண கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து சபைக்குரிய வீதி அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட ரூபா 14,774,321 தொகையான கடன் பணத்திற்காக 2013 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய தொகை ரூபா 2,256,180 ஆக 04 தவணைகளில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டின் iv ஆவது காலாண்டிற்காக செலுத்த வேண்டிய தவணைப் பணமான ரூபா 564,045 இல் ரூபா 350,000 தொகை இறுதித் தடவையாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 13,533,848 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 11,896,661 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல், பதிவேடு மற்றும் பட்டோலை தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,077,966 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,661,866 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| i. | வீதவரியும் வரியும் | 310 | 205 | 86 |
| ii. | வாடகை | 12,696 | 9,252 | 463 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 515 | 624 | 257 |
| iv. | ஏனைய வருமானம் | 13,257 | 13,562 | 1,681 |

### 2.2.2 கடை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகொ/2010/01(2) ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி மதிப்பீட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு சகல கடைகளுக்காகவும் வாடகைப் பணம் தீர்மானிக்கப்பட வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் பொதுச் சந்தையின் கடைகளுக்காக அவ்வாறான மதிப்பீடொன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் (06) இன் படி ஏதாவது ஒரு தரப்பினர் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பிடப்பட்ட தொகை புதிய மதிப்பீட்டின் மூலம் திருத்தம் செய்யப்பட வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் தெபொக்காவையில் 04 கடைகளுக்காக 2007 மார்ச் 20 ஆந் திகதி மதிப்பிடப்பட்ட தொகை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சகல உடன்படிக்கைகளும் மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை நாளது வரையாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை ரூபா 452,825 ஆக இருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் படி அந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டலொன்றான அல்மமாலி ஹோட்டலினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2012 மற்றும் 2013 ஆண்டுகளுக்குரியதாக அறவிடவேண்டிய ரூபா 82,367 நிலுவையையும் உள்ளடக்கி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணமும் ஆக ரூபா 256,657 கூட்டுத்தொகையொன்று 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 மற்றும் 150(4) ஆம் பிரிவுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------

(அ) 2013 பெப்ரவரி முதல் யூன் 14 ஆந் திகதி வரை செயலாளர் பதவியில் பதில் கடமையாற்றும் ஓய்வூதியக்காரர் ஒருவருக்கு பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 09/2007 இன் 02(vi) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 15,232 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையும் சபையினால் சேகரிக்கப்பட்ட ரூபா 512,274 தொகையான தேசத்தைக் கட்டியெழும்பும் வரித்தொகை 2014 யூன் 20 ஆந் திகதி வரையிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

(அ) சபைக்குச் சொந்தமான புத்தி மந்திரய (நகர மண்டம்) நிர்மாண நடவடிக்கைகள் வெளி அமைப்பொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்களைத் தீர்த்தல் தொடர்பாக முறையான இணக்கப்பாடொன்றிற்கு வந்திராத போதிலும் ரூபா 45,916 தொகையான நீர் மற்றும் மின்சாரப்பட்டியல்களுக்காக சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2013 சனவரி முதல் ஒக்தோபர் வரை ரூபா 738,376 தொகையான வீதி விளக்கு உபகரணங்கள் வெளி நிறுவனமொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 177 இற்கு முரணாக கூறுவிலை கோரப்படாமல் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது பெறப்பட்ட கூறுவிலையை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

-------------------------------------------------

**(அ) விளைவற்ற சொத்துக்கள்**

------------------------------------------

சபைக்குச் சொந்தமான இலக்கம் 53 – 5713 என்ற கெப் வண்டி மற்றும் எந்திரத்துடனான கைடெக்ரர் என்பவற்றை பழுதுபார்ப்பதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கைகளோ எடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்டன.

**(ஆ) இனங்காணப்பட்ட நட்டம்**

-----------------------------------------

ரூபா 92,000 பெறுமதியான இலக்கம் K 80 990097 என்ற உழவு இயந்திரத்தின் எந்திரம் 2000 ஆகஸ்ட் 31 அல்லது அதற்கு அண்மித்த திகதியில் தொலைந்து போயிருந்த போதிலும் இது தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 103(1), 104, 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்